# அரும்பணி ஆற்றிய அண்ணல் அம்பேத்கரை அசிங்கப்படுத்துவதா?

## புதுடெல்லி பேட்டியில் – மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா கடும் கண்டனம்!

சென்னை, டிச. 21-

**புதுடெல்லியில், மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், “அரும்பணி ஆற்றிய அண்ணல் அம்பேத்கர் அவர்களை அசிங்கப்படுத்துவதா?” எனக் கடும் கண்டனம் தெரிவித்தார்.**

அவரது பேட்டி வருமாறு:-

**கேள்வி:** *நாடாளுமன்றம் இன்றும் முடங்கி இருக்கிறது. எதற்காக?*

**பதில்:** இத்தனை நாள் முடங்கியதற்கும், இன்றைக்கு முடங்கியதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. இத்தனை நாட்களாக எதிர்க்கட்சிகள் நியாயமான பிரச்சினைகள் மணிப்பூர் பிரச்சினை, அதானி பிரச்சினை, சம்பல் பிரச்சினை என்று எழுப்பின. பின்னர் ஆளுங்கட்சி, அவர்கள் தரப்பிற்கு வழக்கத்திற்கு மாறாக திடீரென்று ஒரு பிரச்சினையைக் கிளப்பி இந்த வாரம் முழுவதும் ஆளுங்கட்சினரால்தான் அவை முடக்கப்பட்டது. அதற்கு எதிர்க்கட்சி காரணம் அல்ல.

ஆனால், நேற்று மதியத்தில் இருந்தே நடைபெற்றதற்கு மிக முக்கியமான காரணம், நேற்றைக்கு முன்தினம் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்கள் மாநிலங்களவையில் அரசியல் சட்டத்தை ஏற்று 75 ஆண்டுகள் நிறைவுற்றதையொட்டி நடைபெற்ற விவாதத்தை நிறைவுற்று அவர் பேசினார். நிறைவு உரை அவருடையது.

அப்படி பேசுகிறபோது, அவர் காங்கிரஸ் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை வைத்தார். அதெல்லாம் இயற்கைதான். ஒரு கட்சி இன்னொரு கட்சியின் மீது குறை சொல்வதோ, குற்றம் சொல்வதோ, அதற்கு ஏதாவது சொல்வதோ நியாயமானதுதான். ஆனால், அப்படி சொல்லிக் கொண்டு வருகிறபோது, அவர் காங்கிரசை விமர்சிப்பதாக கருதி, “காங்கிரஸ் கட்சி எப்போது பார்த்தாலும் அம்பேத்கர்... அம்பேத்கர் என்று அவருடைய பெயரை உச்சாடனம் செய்து கொண்டே இருக்கிறார்கள். அவ்வாறு அவர் பெயரை நீங்கள் சொல்வதற்கு பதிலாக, கடவுள் பெயரை சொல்லியிருந்தால்கூட உங்களுக்கு எதிர் காலத்தில் ஏழு ஜென்மத்திற்கும் புண்ணியம் கிடைக்கும்” என்று பேசினார்.

### ஏற்புடையது அல்ல!

எனவே, இந்த வார்த்தை என்பது அம்பேத்கரின் பெயரை உச்சரிப்பதால் உங்களுக்கு எந்த பயனும் இல்லை என்பதும், அதற்கு மாறாக நீங்கள் ஒரு கடவுள் பெயரை சொல்லியிருந்தால் என்று சொல்கிறபோது அது ஏற்புடையது அல்ல.

அம்பேத்கர் என்கிறவர் இந்த நாட்டின் இருந்த தலைவர்களில் மிக குறிப்பிடத்தக்க ஒருவர். அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு மிக முக்கியமான காரணமாக வரைவு அறிக்கை குழுவின் தலைவராக இருந்தவர். அதில் பல நியாயமான விஷயங்கள் வருவதற்கும். அறிவுப்பூர்வமான விவாதங்களுக்கும் அவர் காரணமாக இருந்திருக்கிறார் என்பது அரசியல் சட்ட நிர்ணய சபையின் விவாதங்களில் இருந்து வெளிப்படுகிறது.

கடைசி நாள் அதாவது 1949 நவம்பர் மாதம் அது நிறைவேற்றுகிற 26ஆம் நாள் அன்று, அவர் ஆட்சி உரை என்பது வரலாற்று சிறப்புமிக்க உரை. அதில் அவர் பேசுகின்றதெல்லாம் எவ்வளவு அறிவுத் திறமை அவருக்கு இருந்தது என்று. வெளிநாட்டுக்கு சென்று படித்தார். இங்கு வந்து நாட்டுக்கு உழைத்தார். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தார். அவரை தெய்வமாக வணங்குகிற, அவரைப் பின்பற்றுகிற ஏராளமான லட்சக்கணக்கானோர் இருக்கி



றார்கள். அதற்கும் அப்பாற்பட்டு அனைத்துக் கட்சியினருக்கும் அவர் மீது மரியாதை உண்டு.

எனவே, அவர் பெயரை உச்சரிப்பதற்கு பதிலாக என்று சொல்கிறபோது, அது மனதை புண்படுத்துவதாக இருக்கிறது. இப்படிப்பட்ட வார்த்தைகளை ஒரு பொறுப்புள்ள அமைச்சரிடம் இருந்து யாரும் எதிர்பார்க்கவில்லை. விமர்சிக்கலாம், விமர்சிப்பதற்கு வேறு காரணங்களை சொல்லலாம். அவருடைய பெயரை நீங்கள் உச்சரித்துக் கொண்டே இருக்கிறீர்கள். அதற்கு பதிலாக என்று சொல்கிறபோது, அதனை காயப்பட்ட காங்கிரஸ் கட்சி, பொதுவாகவே அப்படிப்பட்ட குற்றச்சாட்டை ஏற்க முடியாது என்று அம்பேத்கர் மீது மரியாதை வைத்திருக்கும் அனைவரும் கொந்தளித்து எழுந்தார்கள்.

### தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. நாடாளுமன்றத்தில் அதை எதிரொலிக்க வேண்டியது எங்களுடைய கடமை. காலையில் மகர் துவார் என்று சொல்லும் நுழைவாயிலில் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது, பதிலுக்கு அவர்களும் வந்து அந்த இடத்தில் ஏதோ தெருச் சண்டை போன்று ஒரு சூழ்நிலையை உருவாக்கினார்கள். வெளியில் இரண்டு அரசியல் கட்சிகள் நிற்பதைப்போல.

பொதுவாக, ஒரு எதிர்க்கட்சியோ, ஆளுங்கட்சியோ ஒரு போராட்டம் நடத்தும்போது மற்றவர்கள் சிரித்துக் கொண்டே ஒதுங்கிச் செல்வதுதான் வழக்கம். ஆனால், இன்றைக்கு அவர்களும் ஏட்டிக்கு போட்டி என்பதைப்போல நடந்து கொண்டார்கள். எனவே, அரசியல் தரம் என்பது வெளியில் மங்கி விட்டது என்பதைவிட நாடாளுமன்றத்திலும் அது குறைய தொடங்கியிருக்கிறது. இவர்களின் அணுகுமுறையின் காரணமாக.

எதிர்க்கட்சியின் ஒரு காரணத்தை முன் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள் என்றால், அவையில் வந்து பதில் சொல்லலாம்; விளக்கம் சொல்லலாம்; அப்படிப்பட்ட கருத்தில் நான் சொல்லவில்லை என்றுகூட அவர் விளக்கம் தரலாம். அல்லது வேறு யாராவது அமைச்சர் தரலாம்; அதற்குப் பதிலாக இவர்களும் கூட்டமாக சேர்ந்து கொண்டு, இன்னொரு கூட்டம் நிற்கும்போது வந்து நிற்பது. பின்னர் அதை வேறு போன்று சித்தரிப்பது என்ற நடவடிக்கைகள் எல்லாம் இன்று நடந்தது.

இதன் தொடர்ச்சியாகத்தான், இன்றைக்கு நாடாளுமன்றத்தில் பிரச்சினை எழுப்பினோம். அவை இரண்டு மணி வரை ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது.

**கேள்வி:** *மீண்டும் 2 மணிக்கு இதே பிரச்சினை எழுப்பப்படுமா?*

### சரியான விளக்கம் வரவேண்டும்!

**பதில்:** நிச்சயமாக எழுப்பப்படும். காரணம், காயப்பட்டிருப்பது காங்கிரஸ் கட்சியினர் மட்டுமல்ல, அம்பேத்கர் அவர்கள் மீது மரியாதை வைத்திருக்கும் அனைத்து தரப்பினரும். அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் கூட்டணி கட்சியினர் என்பதை கடந்து, அவர் மீது கொண்டிருக்கும் மரியாதையின் காரணமாக இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்நாடு எங்கிலும் நடத்திக் கொண்டிருக்கிறது.

எனவே, இதற்கு அரசாங்கத் தரப்பில் இருந்து அல்லது உள்துறை அமைச்சரிடம் இருந்து சரியான விளக்கம் வர வேண்டும். அதனால், இது மதியமும் நிச்சயமாக தொடரும்.

**கேள்வி:** *பா.ஜ.க. திசை திருப்பல் என்கிற பெயரில் நீங்கள் போராட்டம் நடத்திய அம்பேத்கர் புகைப் படத்தையே மாற்றி, வேறு படத்தை போட்டு எல்லாம் பிரச்சாரம் செய்கிறார்கள்?*

**பதில்:** அவர்கள் இப்படித்தான் செய்வார்கள். நான்தான் சொல்கிறேனே, நாடாளுமன்றத்தில் சில மரபுகளும் மாண்புகளும் உண்டு. அவை நடவடிக்கைகளில் எப்படி அது இப்போது தகர்க்கப்பட்டிருக்கிறதோ, அதைப் போல வெளியிலும். நாங்கள் வளாகத்திற்குள்தான் ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம். காரணம், நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே வருவோமேயானால், அது சட்டம்ஒழுங்கு பிரச்சினை. காவல்துறை வந்து சேரும். அதனால் உள்ளுக்குள்ளே நாங்கள் போராட்டம் நடத்துகிறோம், ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம்.

நாள்தோறும் யாராவது எதாவது ஒன்று செய்து கொண்டுதான் இருப்பார்கள். ஆனால், எதிருக்கு எதிர் என்று வந்து நின்றதெல்லாம் இதுவரை கிடையாது. இன்றைக்கு அவர்கள் அப்படி செய்கிறார்கள்; சித்தரிக்கிறார்கள்; இல்லாதது பொல்லாதது எல்லாம் பேசுவார்கள்.

எனவே, அரசியல் குறியீடுகளை அடைவதற்காக அனைத்து விதமான நெறிமுறைகளையும், இது நாள் வரை பின்பற்றி வந்த மரபுகளையும் தகர்த்தெறிவது என்ற ஒரு அணுகுமுறையோடு அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்து சமாளிக்க வேண்டிய பொறுப்புதான் எதிர்கட்சியினராகிய எங்களுக்கு இருக்கிறது.

**கேள்வி:** *ராகுல் காந்தி தள்ளி விட்டதாக பா.ஜ.க. எம்.பி. ஒருவர் காயம் அடைந்திருக்கிறாரே?*

**பதில்:** அவர் கூட்டத்தில் யாரோ தன்னை தள்ளி விட்டதாகதான் சொல்லி இருக்கிறார். கூட்டத்தில் உள்ளே நுழைய முயன்றபோது, தன்னை ஒருவர் தள்ளிவிட்டதாகவும், அதில் நான் தடுமாறியதாகவும் ராகுல் காந்தி அவர்கள் சொல்லி இருக்கிறார்.

எனவே, ஒரு பெரிய கட்சியின் தலைவரை அடிக்கடி இப்படி அவர்கள் குறிவைத்து பேசுவது என்பது, அவருடைய இமேஜ் என்று சொல்வதைப்போல, அவரைப் பற்றிய பிம்பத்தை இவர்கள் கலங்கப்படுத்துவதைப் போல அவர்கள் முயற்சி செய்கிறார்கள். பெரிய தலைவர் அப்படி எல்லாம் நடந்து கொள்வதற்கு வாய்ப்பே இல்லை. சராசரியாக யாரும் சிந்திக்கலாம். ஒரு எதிர்க்கட்சித் தலைவராக மக்கள் அவையில் இருப்பவர். காங்கிரஸ் கட்சியின் ஒரு நம்பிக்கைக்குரிய தலைவர். அவர் ஒருவரை தள்ளினார் என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாது. மாறாக அவர்தான் சொல்லிருக்கிறார். என்னைதான் ஒருவர் தள்ளி இருக்கிறார் என்று. எனவே, எது சரி என்பது பின்னால்தான் தெரியும்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேட்டியளித்தார்.



நேற்று (20.12.2024) சென்னை தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் 2025–2026ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை சார்ந்த வருடாந்திர செயல்திட்டம் (AAP) உருவாக்கம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மணிகண்டன் நாடிமுத்து தலைமையில்

# சென்னை தெற்கு மாவட்டக் கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

### சி.எச்.சேகர் சிறப்புரை!

*சென்னை, டிச.21*

*அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி சென்னை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.*

*தலைமை: மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து. கூட்டத்தில் சென்னை மண்டல பொறுப்பாளர் சி.எச்.சேகர் ஆலோசனை வழங்குகிறார்.*

*சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்பஅணி ஆலோசனைக்கூட்டம், இன்று (21.12.2024 சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சைதாப்பேட்டை கிழக்கு ஜோன்ஸ் சாலையில் உள்ள சாய் கிருஷ்ணா மினி ஹாலில், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் ஆலோசனைப்படி சென்னை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்பஅணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணை செயலாளரும், சென்னை மண்டல பொறுப்பாளருமான சி.எச். சேகர் அவர்கள் கலந்து கொண்டு 26.12.2024 வியாழக்கிழமை அன்று நடைபெற உள்ள மண்டல ஆய்வு கூட்டம் குறித்து பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்க உள்ளார்.*

*எனவே இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியை சார்ந்த மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் குறிப்பிட்ட நேரத்திற்குள் கலந்துகொண்டு சிறப்பித்து தருமாறு சென்னை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*பொருள்: தகவல் தொழில்நுட்ப அணியின், மண்டல ஆய்வுக்கூட்டம் 26.12.2024 வியாழக்கிழமை நடைபெற உள்ளதை குறித்து ஆலோசனைக்கூட்டம்.*

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில்

# இந்திய நாட்டிற்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

### தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு!

சென்னை, டிச.21

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் நாட்டிற்கே தமிழ்நாடு முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. நாட்டிலேயே முதல் முறையாக 1986ஆம் ஆண்டில் காற்றாலை மூலமாக தமிழ்நாட்டில் மின் உற்பத்தி செய்யப்பட்டது. காற்றாலை மின் உற்பத்தியில் சுமார் 11,000 மெகா வாட் நிறுவு திறனுடன் இந்தியாவிலேயே இரண்டாவது இடமும், சூரிய ஒளிச்சக்தி மின்சார உற்பத்தியில் சுமார் 9,400 மெகா வாட் நிறுவு திறனுடன் நாட்டிலேயே மூன்றாவது இடமும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கென தனியே தமிழ்நாடு பசுமை மின்உற்பத்தி நிறுவனம் (Tamil Nadu Green Energy Company Limited) தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டு மிகச்சிறப்பான பணியினை செய்து வருகிறது.

#### 100 பில்லியன் யூனிட் இலக்கு!

இது மட்டுமல்லாமல், சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு இல்லாத பசுமை எரிசக்தி உற்பத்தியை தமிழ்நாட்டில் மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் கனவினை நனவாக்கும் வகையில் வரும் 2030–ஆம் ஆண்டிற்குள் கூடுதலாக 100 பில்லியன் யூனிட் எனும் அளவு மின்சாரத்தை, சூரிய மின்சக்தி, காற்றாலை ஆகியவற்றுடன் சேர்த்து வளர்ந்து வரும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வாய்ப்புகளான நீரேற்று மின் திட்டங்கள் (Pumped Storage Projects), மின்கல சேமிப்பு திட்டங்கள் (Battery Energy Storage Systems), உயிரி ஆற்றல் (BioMass) மற்றும் இணை மின் உற்பத்தி திட்டங்கள் (CoGen) வாயிலாகவும் மின் உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

மேலும், ஒன்றிய அரசின் 2030–ஆம் ஆண்டுக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கென 43 சதவீதமாக இலக்கை நிர்ணயித்துள்ள போதிலும் தமிழ்நாடு அரசு 50% என்ற மிக உயரிய இலக்கினை அடையத் திட்டமிட்டு அதற்கான பணிகளை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தி வருகிறது.

புதுப்பிகத்தக்க மின் உற்பத்தியில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடத்தில் இருந்த போதிலும், மரபுசார மின்சக்தி வருடத்தின் அனைத்து நாட்களிலும் சீராக கிடைப்பதில்லை, ஒவ்வொரு நாளிலும் காலையில் கிடைக்கும் அளவு மாலையில் கிடைப்பதில்லை. இவ்வாறு சீராகப் பெறப்படாத புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை கொண்டு அதிகரிக்கும் மின் தேவையை நிறைவு செய்யவும், மின் கட்டமைப்பின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் மொத்த மின் தேவையில் குறிப்பிடத்தக்க அளவு மரபு சார்ந்த மின் உற்பத்தி அவசியமாகிறது.

அரசு பொறுப்பேற்ற இந்த மூன்றரை ஆண்டுகளின் தமிழ்நாடு தொழில்துறையில் மாபெரும் வளர்ச்சியினைக் கண்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டுகள் அதிகரித்து வருவதன் காரணமாக ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கியுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் மின் தேவை 10% அதிகரித்த வண்ணம் உள்ளது. இவ்வாறான அத்தியாவசிய தேவையின் அடிப்படையிலேயே உடன்குடி மற்றும் எண்ணூர் ஆகிய இடங்களில் அதிநவீன தொழில் நுட்பத்துடன் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தற்போது எண்ணூரில் அமைய இருக்கின்ற திட்டம் தமிழ்நாட்டில் உள்ள மின் கட்டமைப்பின் பாதுகாப்பை (Grid Stability) உறுதி செய்ய உதவுவதுடன் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை மேலும் அதிகரிக்கவும் உறுதுணையாக இருக்கும்.

#### மிகக் குறைந்த வகையில் மின்சாரம்!

இனி வரும் காலங்களிலும் முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, பொதுமக்களுக்கும் வேலைவாய்ப்பினை நல்கும் தொழிற்சாலைகளுக்கும் தரமான மின்சாரத்தை நாட்டிலேயே மிகக் குறைந்த விலையில் தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்யும் வகையில் மரபு சார்ந்த மின் உற்பத்தியுடன் மிக அதிக அளவில் புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியும் செய்யும் வகையில் பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

இதன் மூலம், தமிழ்நாடு மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதுடன், நாட்டிலேயே புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியில் முதன்மை மாநிலமாகத் திகழும்.

இவ்வாறு தமிழ்நாடு மின்சாரத்துறை அறிவித்துள்ளது.

## அண்ணல் அம்பேத்கர் பற்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சால்

# பிரதமர் மோடி அரசுக்கே பெரும் சிக்கல்!

### தினகரன் நாளேடு தலையங்கம்!


*சென்னை, டிச. 21-*

*அண்ணல் அம்பேத்கர் பற்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சால் பிரதமர் மோடியின் அரசுக்கே பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.*

*அது வருமாறு:-*

*அரசியல் சாசனத்தின் தந்தை என்று போற்றப்படும் அம்பேத்கரை நாட்டின் உள்துறை அமைச்சர் பதவி வகிக்கும் அமித்ஷா மாநிலங்களவையில் அவதூறாக பேசியுள்ளார். அம்பேத்கர் என்று முழங்குவது தற்போது பேஷனாகி விட்டது. அதற்கு பதில் கடவுள் பெயரை உச்சரித்திருந்தால் சொர்க்கத்தில் இடமாவது கிடைத்திருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார். இவரது பேச்சுக்கு தற்போது நாடு முழுவதும் கண்டனம் வலுத்து வருகிறது.*

*தமிழ்நாட்டில் திமுக சார்பில் மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. விடுதலை சிறுத்தை கட்சி, காங்கிரஸ் கட்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது. நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். இவர்கள் போராட்டத்துக்கு எதிராக பாஜ உறுப்பினர்கள் போட்டி போராட்டம் நடத்தியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டு அவை ஒத்திவைக்கப்பட்டது.*



தினகரன்

டிசம்பர் 20, 2024 வெள்ளிக்கிழமை

வலுக்கும் கண்டனம்

அரசியல் சாசனத்தின் தந்தை என்று போற்றப்படும் அம்பேத்கரை நாட்டின் உள்துறை அமைச்சர் பதவி வகிக்கும் அமித்ஷா மாநிலங்களவையில் அவதூறாக பேசியுள்ளார். அம்பேத்கர் என்று முழங்குவது தற்போது பேஷனாகி விட்டது. அதற்கு பதில் கடவுள் பெயரை உச்சரித்திருந்தால் சொர்க்கத்தில் இடமாவது கிடைத்திருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார். இவரது பேச்சுக்கு தற்போது நாடு முழுவதும் கண்டனம் வலுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் திமுக சார்பில் மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. விடுதலை சிறுத்தை கட்சி, காங்கிரஸ் கட்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது. நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். இவர்கள் போராட்டத்துக்கு எதிராக பாஜ உறுப்பினர்கள் போட்டி போராட்டம் நடத்தியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டு அவை ஒத்திவைக்கப்பட்டது.

*அரசியல் சாசனம் என்ற அஸ்திவாரத்தின் மீது தற்போது நாடு இயங்கி வருகிறது. அனைவருக்கும் சம உரிமை என்று அரசியல் சாசனத்தில் எழுதி ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் உரிமைகளை மீட்டெடுத்து பல்வேறு அதிகாரங்களில் இன்று இருப்பதற்கு முக்கிய காரணம் அம்பேத்கர் ஆவார். அவரது புகழுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் அமித்ஷா நாடாளுமன்றத்தில் பேசியிருப்பதால் அவரது முகத்திரை மட்டுமல்ல பாஜவின் முகத்திரையும் கிழிந்து உண்மையான முகம் வெளியே தெரிய வந்துள்ளது.*

*அமித்ஷாவின் பேச்சை நாடு முழுவதும் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கண்டித்துள்ளனர். ‘அரசியலமைப்பை உருவாக்கிய மாமனிதர் மீது பாஜவின் மனநிலையை உங்கள் பேச்சால் மக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள். பாஜவினர் மோடி, மோடி என்று கூறுவதற்கு பதில் கடவுள் பெயரை கூறியிருந்தாலும் சொர்க்கம் கிடைத்திருக்கும். அம்பேத்கரின் நினைவை எந்த அளவுக்கு குறைக்க பாஜ திட்டமிடுகிறது என்பதை அறிந்துள்ளோம். சூரியனும், சந்திரனும் உள்ள வரை அம்பேத்கர் இருப்பார்.*

*அவரது கொள்கைகள் வாழும். அம்பேத்கர் இந்த மண்ணில் பிறக்காமல் இருந்திருந்தால் பலர் முக்கிய பதவிகளில் அமர்ந்திருக்க முடியாது. அமித்ஷா உள்துறை அமைச்சராகி இருக்க முடியாது. மோடி பிரதமராகி இருக்கமுடியாது. அம்பேத்கரின் தொலைநோக்கு பார்வை தான் நம்மை உயர்த்தி இருக்கிறது என்று தலைவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதிக பாவங்கள் செய்தவர்கள் தான் பாவ, புண்ணியம் குறித்து கவலைப்பட வேண்டும். நாட்டையும், மக்களையும், அரசியல் சாசன பாதுகாப்பு குறித்து கவலைப்படுபவர்கள் அம்பேத்கரின் பெயரை தான் சொல்வார்கள் என்று அமித்ஷாவின் பேச்சுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*அம்பேத்கரை இழிவுபடுத்தி அரசியலமைப்பு சட்டத்தையே மதிக்காமல் பாஜவினர் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சி தான் இது என்று அரசியல் விமர்சகர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அம்பேத்கர் குறித்து அமித்ஷா பேசிய தொனி நையாண்டி செய்வதாக இருந்ததால் அமித்ஷாவுக்கு எதிராக மாநிலங்களவையில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உரிமை மீறல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அம்பேத்கரை அவதூறாக பேசியது அமித்ஷாவுக்கு மட்டுமல்ல, மோடி அரசுக்கே பெரும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது.*

*இவ்வாறு ‘தினகரன்’ ‘நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.*



சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ந.ம.மகேஷ்குமார் ஏற்பாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1048 நபர்களுக்கு அசைவ சமபந்தி விருந்து நடைபெற்றது. இதில் சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., கலந்துகொண்டு துவக்கி வைத்தனர். உடன் ஐட்ரீம் மூர்த்தி, எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர், எம்.எல்.ஏ., தா. இளையஅருணா, பகுதி செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்திய நாராயணன், எ.அண்ணாதுரை மற்றும் பலர் உடனிருந்தனர்.